# *புனித பீற்றர் ஜீலியன்*

இவர் 04.02.1811ல் பிரான்ஸ் நாட்டில் பிறந்தார். இவருடைய பெற்றோர் மிகுந்த பக்தி உள்ளவர்கள். இவர் குழந்தையாக இருக்கும் போதே தாய் இவரை அடிக்கடி கோவிலுக்குத் தூக்கிச் சென்று கடவுளுக்கு இவரை ஒப்புக் கொடுப்பாள். இவ்விதமாக திவ்விய நற்கருணை மீது இவரது உள்ளத்தில் மிகுந்த பக்தி ஏற்பட்டது. திருப்பேழையில் இருக்கும் இயேசுவை சந்திக்கும்படி கோவிலுக்குச் சென்று இயேசுவுடன் நெடுநேரம் பேசிக் கொண்டிருப்பார். திருப்பேழைக்கு மிக சமீபமாகச் செல்ல விரும்புவார். ஒரு முறை இவர் ஒரு சிறு ஏணியை வைத்து பீடத்தில் ஏறி திருப்பேழையில் சிரசை வைத்து நெடுநேரம் இயேசுவுக்கு செவி கொடுத்துக் கொண்டிருந்தார். கரங்களைக் குவித்திருந்தார். கண்கள் திருப்பேழையையே நோக்கியிருந்தன. அங்கு வர நேரிட்ட ஒருவர் “பீற்றர் அங்கு என்ன செய்கிறாய்?” என்று கேட்டார். “இயேசுவுக்கு சமீபமாக இருந்து அவருடன் பேசுகிறேன். அவருக்கு செவி கொடுக்கிறேன்” என்று சிறுவன் சொன்னான். திருப்பலி மீது இவருக்கு அதிக பக்தி உண்டு. திருப்பலிக்கு உதவி செய்வதை பெரும் பேறாக கருதுவார். இவருக்கு மரியாள் என ஒரு அக்கா உண்டு. ஒரு நாள் அவளைப் பார்த்து “அடிக்கடி திவ்விய நன்மை வாங்கும் நீ பேறு பெற்றவள், ஒரு நாள் எனக்காக திவ்விய நன்மை வாங்கி ஒப்புக்கொடு” என்றார். உனக்காக என்ன வரம் கேட்க வேண்டும் என்று அக்காள் வினவ “நான் தாழ்ச்சியும், சாந்தமும், கற்பும் உள்ளவனாய் இருந்து குருவாகும் வரத்தைக் கேள்” என்றார்.

16.03.1823-ல் இவர் புதுநன்மை வாங்கிய அன்று இயேசு அவருக்கு அநேக வரங்களைக் கொடுத்தார். குரு ஆவலாக இயேசுவுக்கு வாக்களித்தார். ஒரு முறை அவருக்கு ஒரு பொல்லாத நோய் வந்தது. அப்போது முதலாய் “நான் குரு ஆவேன்; திருப்பலி ஒப்புக் கொடுப்பேன்” என்று சொல்லிக் கொண்டிருந்தார். தேவதாய்க்கு இவர் தன்னை முழுவதும் அர்ப்பணித்தார். அவளது உதவியால் இவர் குருவானார். திவ்விய நற்கருணைக்குத் தோத்திரமாக ஒரு துறவற சபையை ஏற்படுத்தினார். தம்மைச் சுற்றிலும் முழந்தாளிட்டு இருந்தவர்களை ஆசீர்வதித்துக் கொண்டே இவர் உயிர் நீத்தார்.

**சிந்தனை:**

திவ்விய நற்கருணை வாங்கி பின் 15 நிமிடங்களாவது இயேசுவுடன் சல்லாபித்து, தாழ்ச்சி சாந்தகுணம், கற்பு என்னும் வரங்களைக் கேட்டு மன்றாடும்.

**செபம்:**

திவ்விய நற்கருணையில் இருக்கும் இயேசுவே, நான் சாகும் வரை தாழ்ச்சியும், சாந்தமும், கற்பும் உள்ளவனாக இருக்கும் வரம் தாரும்.